**முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும்**
**தலைமைப் பொறியாளர் (கட்டடம்)**
**சென்னை மண்டலம், பொ.ப.து. அலுவலகம்,**
**சேப்பாக்கம், சென்னை–600 005**

**<u>சுற்றிக்கை எண். உசெபொ / டி10 / 24475 / 2020, நாள் 24.01.2020</u>**

**பொருள் :** பொதுப்பணித்துறை – கட்டடங்கள் – அரசு விழாக்கள் – ஏற்பாடு செய்யும் பணிகள் – பொதுப்பணித்துறை அலுவலர்கள் / பணியாளர்கள் – பாதுகாப்பு மற்றும் அடையாள சட்டை (Safety and Identity Jacket) அணிதல் – ஆணை வழங்கப்படுகிறது.

***

பொதுப்பணித்துறை மூலமாக அனைத்து கட்டுமானப் பணிகள் மற்றும் மிக மிக முக்கிய / முக்கிய பிரமுகர்கள் கலந்துகொள்ளும் அரசு விழா ஏற்பாடுகள், பொதுப்பணித்துறை அலுவலர்கள் / பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறான அரசு பணிகளிலும் மற்றும் அரசு விழா ஏற்பாடு பணிகளிலும் பொதுப்பணித்துறையின் அலுவலர்கள் / பணியாளர்கள் ஏற்கனவே உடுத்தியுள்ள உடைக்கு மேல், நீல நிறத்தில், முன்பகுதி, பின்பகுதியில் பொ.ப.து. (PWD) என வாசகம் அச்சிடப்பட்ட பாதுகாப்பு மற்றும் அடையாள சட்டை (Safety and Identity Jacket) மற்றும் பொ.ப.து (PWD) என அச்சிடப்பட்ட தலை உறையை (Cap) இனிவரும் காலங்களில் பயன்படுத்தப்பட வேண்டும் என ஆணையிடப்படுகிறது.



(மாதிரி)

**முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்)**
**மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்)**
**சென்னை மண்டலம், பொ.ப.து. சார்பில்**

**பெறுநர்**

1. அனைத்து தலைமைப் பொறியாளர், பொ.ப.து.
2. அனைத்து கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து.,
3. அனைத்து செயற் பொறியாளர், பொ.ப.து.,

**நகல் –** அரசு முதன்மைச் செயலாளர், பொதுப்பணித்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9
**நகல் –** அரசு முதன்மைச் செயலாளர், உள்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9
**நகல் –** காவல் துறை தலைவர், காவல் துறை தலைமையகம், சென்னை–4